1980 பிப்ரவரி 6]

மாண்புமிகு திரு. ப, குழந்தைவேலு: தலைவர் அவர்களே இந்தத் திட்டம் நீண்ட நெடு நாட்களாக அரசினுடைய ஆய்விலிருந்து இப்போது இந்த அரசு வந்ததற்குப் பின்னாலேதான் இந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று முடிவு செய்தது. 301 லட்சம் ரூபாயில் இந்தத் திட்டம் போடப்பட்டிருக்கிறது. இதன் மூலம் 3,250 ஏக்கர் புதிய புஞ்சை நிலம் டாசன வசதி பெறும், 400 ஏக்கர் இரண்டுபோக நஞ்சை நிலங்கள் பயன் அடையும் 2,200 ஏக்கர் நிலங்கள் பாசன உறுதி பெறவும் 202 ஏக்கர் பாசனப் பற்றாக்குறை போகவும் வழி வகை செய்யும் திட்டமாக இது இருக்கும்.

திரு. என். பழனிவேல்: தலைவர் அவர்களே, திட்டத்தினுடைய விவரங்களை அமைச்சர் கூறியதற்கு நன்றி. இந்தத் திட்டம் இந்த ஆண்டே எடுத்துக் கொள்ளப்படுமா என்றும், அமைச்சர் அவர்களும் இந்தத் தொகுதியில் சம்பந்தப்பட்டிருப்பதால், அவருடைய சார்பிலேயும் வேண்டுகோளாக வைக்கிறேன். இந்த 2 தாலுகாவிலும் உள்ள மக்கள், இந்த அணைக் கட்டினால் வசதி அடைவார்கள். எனவே இந்த ஆண்டே அவசியமாக எடுத்துக் கொள்ளப்படும் என்ற உறுதியை அளித்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்வார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே உடுமலைப் பேட்டை தொகுதியும், பழனி தொகுதியும் பயன் பெறுகிற வகையிலே இந்தத் திட்டம் இந்த ஆண்டிலேயே அமல் படுத்தப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல்கோரல்

(அ) டீசல் பற்றாக்குறை குறித்து.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவர் அவர்களே, மிக முக்கியமான விஷயத்தை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்கு எழுந்து நிற்கிறேன், சேலம் மாவட்டத்திலே ஆத்தூர் பகுதியிலே விவசாயிகள் எல்லாம் மிகுந்த சங்கடத்திற்கு ஆளாகி இருக்கிறார்கள். பஸ் போக்குவரத்தை மறித்து பெரிய போராட்டத்தை நடத்தி இருக்கிறார்கள்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் சொல்வது முக்கியமானதுதான. அதை அனுமதித்துக் கொண்டே போனால் எல்லோரும் கேட்பார்கள். கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வருவதற்கு விதி இருக்கிறது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவர் அவர்களே, கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்தால் இரண்டு நாட்கள் ஆகும். அட்ஜர்ன்மென்ட் மோஷன் கொடுக்க முடியாது. அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்ற காரணத்தால் சொல்லு கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் சொல்வதைக் கேளுங்கள். தாங்கள் இந்தப் பிரச்சினையை எடுத்துச் சொல்ல வேண்டும் என்று நினைக்கிறீர்கள். எந்த விதியின் கீழ் இதை அனுமதிக்க முடியும் என்று சொல்லுங்கள்,

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவர் அவர்களே, கேள்வி நேரம் முடிந்த உடனே முக்கியமான விஷயமாக இருந்தால்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முக்கியமான விஷயம் இல்லாவிட்டால் திரு. மாரிமுத்து எழுந்திருக்கமாட்டார் என்று எனக்குத் தெரியும். இதை அனுமதித்துவிட்டால், இதுவே முன் மாதிரியாகப் போய் சபை நடவடிக்கை பாதிக்கப்படும்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: முன் பெஞ்சிலே இருக்கிற தலைவர்கள் இம்மாதிரி முக்கியமான பிரச்சினையாக இருந்தால், சம்பவங்கள் நடந்தால் எடுத்துச் சொல்லலாம் " என்று சொன்னார்கள்.

தற்போது டீசல் கிடைக்கவில்லை அதனாலே ஆயில் எஞ்ஜின் கள் ஓட்டமுடியவில்லை. மின்சாரத்திலே ஓட்டலாம் என்றால் மின்சார வெட்டு ஏற்பட்டிருப்பதால் மின்சாரம் கிடைக்கவில்லை. இது விவசாயிகள் மத்தியிலே பெரிய கிளர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது. தமிழ்நாடு பூராவும் டீசல் கிடைக்கவில்லை. மின்சாரத் தட்டுப்பாடு இருப்பதால் மின்சாரமும் கிடைக்க வில்லை. விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பயிர்கள் காய்கின்றன. எனவே இந்தப் பிரச்சினையைத் தீர்க்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆத்தூர் பகுதியிலே மிகுந்த கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதைக் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவர் அவர்களே, உங்கள் அனுமதியோடு நானும் உங்கள் கவனத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய பகுதியிலே ....

1980 பிப்ரவரி 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள்; முன் வரிசைக்கு மட்டும்தான் அந்தச் சலுகை.

திரு. பெ.சு. திருவேங்கடம்: தலைவர் அவர்களே, ஒழுங்குப் பிரச்சினை. வடார்க்காடு மாவட்டம் திருவண்ணாமலையிலே—மாவட்டம் பூராவுமே—டீசல் கிடைக்கவில்லை. மின்சாரம் கிடைக்கவில்லை. மின்சாரம் இல்லாமல் ஒரு வார காலமாக போராட்டத்தை விவசாயிகள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே இதைச் சீர் செய்ய தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு பேரவைத் தலைவர் அவர்கள் அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டுகிறேன்.

[முற்பகல் 10-10]

மாண்புமிகு திரு. சி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, மின் பற்றாக்குறையைப் பொறுத்தவரையில் நெய்வேலி நிறுவனத்தில் போதுமான அளவிற்கு மின் உற்பத்தி செய்யப்படவில்லை. அதேபோல் மேட்டூரில் இருந்து தஞ்சைக்கு விடப்படுகிற தண்ணீர் நிறுத்தப்பட்டு இருக்கின்ற காரணத்தால் மேட்டூரில் இருந்து நமக்கு இதுவரையிலும் கிடைத்த மின்சாரம் கிடைக்கவில்லை. இந்தச் சூழ்நிலையில் அண்மையில் மின்சார வெட்டு அமல்படுத்தப்பட்டு இருக்கிறது. கேரளாவோடு நாம் பேச்சு வார்த்தை நடத்த இருக்கின்றோம். அதன் வாயிலாக ஓரளவிற்கு நிலைமை சீர் அடையும் என்ற நம்பிக்கை இருக்கிறது. டீசலைப் பொறுத்தவரையில், தற்போது என்னிடத்தில் தகவல் இல்லை. அது பற்றி அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும்.

ஆ. 6-வது தமிழ்நாடு சட்டசபையைக் கலைப்பது என்கிற பேச்சு குறித்து.

திரு. க. சுப்பு: தலைவர் அவர்களே, முக்கியமான பிரச்னையை நாம் ஆராய்ந்து கொண்டு இருக்கிற நேரத்திலே நம்முடைய சட்டசபையைக் கலைப்பது என்கிற பேச்சு ஒவ்வொரு நாளும் அடிபட்டுக் கொண்டு இருக்கிறது. இந்த சூழ்நிலையில் நம்முடைய முதலமைச்சர் அவர்களும், மின்சாரத்துறை அமைச்சர் அவர்களும், நிதி அமைச்சர் அவர்களும் டெல்லிக்குச் சென்றார்கள். அங்கே பேசியிருக்கிறார்கள். அதற்கு முன்பாகவே காங்கிரஸ் அல்லாத மாநிலங்களைச் சேர்ந்த சட்டசபைகளைக் கலைப்பது சம்பந்தமாக கடிதம் எழுதப்பட்டு இருப்பதாக பாராளுமன்றத்தில் சொல்லப்பட்டு இருக்கிறது. இவ்வளவு முக்கியமான பிரச்னை இருப்பதால் நம்முடைய ஆயுட் காலத்தைப் பற்றி நமக்கே நிச்சயம் இல்லாமல் இருப்பதால், அதைப் பற்றி விளக்கத்தை அமைச்சர் அவர்கள் கொடுத்தால் மேலும் உற்சாகத்தோடு பணியாற்றுவதா அல்லது உட்கார்ந்து விடுவதா என்பதைப் பற்றி முடிவு செய்ய வசதியாக இருக்கும்.